**<u>இரண்டு தலைப்புகள் கொண்ட குற்றச்சாட்டுக்கள்</u>**

(பிரிவு 234, 235 மற்றும் 236 BNSS)

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**<u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.03/2026</u>**

**<u>முன்னிலை</u>** – திரு. J.ராஜ்குமார், B.A., LL.B.,

நீதித்துறை நடுவர் எண்.1, பவானி

ஆகிய நான்

எதிரி – தங்கமணி – 21/2025

த.பெ. ரவிகுமார்.

ஆகிய உம் மீது பின்வருமாறு குற்றஞ்சாட்டுகிறேன்.

| | |
|---|---|
| முதலாவதாக | கடந்த 26.08.2025 ம் தேதி 19.50 மணிக்கு பவானி காவல் நிலைய எல்லக்குட்பட்ட பவானி – ஆப்பக்கூடல் ரோடு சேர்வராயன்பாளையம் பஸ் ஸ்டாப் அருகே சாட்சி கந்தசாமி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது, அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் TN 36 85 4542 என்ற இருசக்கர வாகனத்தை எதிரியாகிய நீர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று நடந்து சென்ற சாட்சி கந்தசாமி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளீர் என்றும், இதன் மூலமாக நீர் பிரிவு 281 BNSன் கீழ் தண்டிப்பதற்குறியதும், இந்நீதிமன்றத்தில் விசாரிக்கத்தக்கதுமான குற்றமொன்றை செய்துள்ளீர் என்றும், |
| இரண்டாவதாக | மேற்படி, தேதி, மணி, சம்பவ இடத்தில், மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, எதிரியாகிய நீர் மேற்படி கந்தசாமி என்பவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளீர் என்றும், இதன் மூலமாக நீர் பிரிவு 125(b) BNS ன் கீழ் தண்டிப்பதற்குரியதும், இந்நீதிமன்றத்தில் விசாரிக்கத்தக்கதுமான குற்றமொன்றை செய்துள்ளீர் என்றும், |

மற்றும் மேற்சொன்ன குற்றச்சாட்டினை படித்துக் காட்டி விளக்கிக் கூறப்பட்டது. குற்றச்சாட்டின் மீது விசாரணை செய்யப்பட வேண்டுமென்று இதன் மூலம் உத்தரவிடுகிறேன்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.17 23:05:34 +0530

நீதித்துறை நடுவர் எண்.1

பவானி.

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.03/2026        17.02.2026**

**எதிரி – தங்கமணி**

| | |
|---|---|
| கேள்வி | கடந்த 26.08.2025 ம் தேதி 19.50 மணிக்கு பவானி காவல் நிலைய எல்லக்குட்பட்ட பவானி – ஆப்பக்கூடல் ரோடு சேர்வராயன்பாளையம் பஸ் ஸ்டாப் அருகே சாட்சி கந்தசாமி கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது, அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் TN 36 85 4542 என்ற இருசக்கர வாகனத்தை எதிரியாகிய நீர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று நடந்து சென்ற சாட்சி கந்தசாமி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில், மேற்படி சாட்சி கந்தசாமிக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளீர் என்றும், எனவே, எதிரியாகிய நீர் பிரிவுகள் 281, 125(b) BNSன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கூறி, பவானி காவல் நிலைய, காவல் உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். இது குறித்து நீர் என்ன கூறுகிறீர்? |
| பதில்:– | பொய் வழக்கு |
| கேள்வி | உம்மீது பிரிவுகள் 281, 125(b)BNSன் கீழ் குற்றச்சாட்டினை வனைந்து படித்துக் காட்டி விளக்கிக் கூறக் கேட்டீரே. இது குறித்து நீர் என்ன கூறுகிறீர்? |
| பதில் | **பொய் வழக்கு** |

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.17 23:05:50 +0530